# “கலைஞரே, என் உயிரே, என் அருமை நண்பா...”

என் அருமை நண்பனைப் பற்றி நான் என்ன பேசுவது? கலைஞர் அவர்களே உங்களைப் பற்றி நான் என்ன பேசுவது? உங்களைப் பற்றி பேசினால், நானும் அதில் சேர்ந்திருப்பேனே? அப்போது என்னையே புகழ்ந்துகொள்வதாகுமே? அதைப்பற்றி பேசுவதா? நாம் இருவரும் சிறுவயதிலே தஞ்சை மாநகரத்திலே தெருத் தெருவாக சந்தோஷமாக பொறுப்பே இல்லாமல் அலைந்தோமே, அதைப்பற்றி பேசுவதா? அல்லது தஞ்சை கோவிலுக்குச் சென்றோமே, சாமி கும்பிட அல்ல, காற்று வாங்குவதற்கு அதைப்பற்றி பேசுவதா?

பின்னர் தி.மு.க. வளர்ச்சிக்காக ஊர், ஊராக... தெருத் தெருவாக நாடகம் போட்டு வசூல் செய்தோமே, அதைப்பற்றி பேசுவதா? அல்லது உணவுக் கிடைக்காமல் தள்ளாடினோமே அதைப்பற்றி பேசுவதா? பின்னர் அங்கிருந்து சென்னை வருவதற்கு பணமில்லாமல் தவித்தபோது உங்கள் விரலிலே இருந்த மோதிரத்தை விற்று நாம் வீடு வந்து சேர்ந்தோமே அதைப்பற்றி பேசுவதா? எதைப் பற்றிய்யா பேசுவது?



நான் சினிமாவுக்கு வந்த பிறகு பராசக்திக்காக எழுதினீர்களே, அந்த வசனத்தைப் பேசி நடித்தேனே. அந்தப் படம் வெளிவந்த பிறகு ஒரே இரவிலே வானத்திலே சென்றேனே, அதைப் பற்றி பேசுவதா? ஒரு சமயம் எனக்கு நீங்கள் எழுதிக் கொடுத்த வசனத்தை என் அருமை சகோதரர் எஸ்.எஸ்.ஆர். அவர்களை பேச வைத்தீர்களே, அதைப் பற்றி பேசுவதா? அதற்காக நான் உங்கள் மீது கோவித்துக்கொண்டேனே அதைப் பற்றி பேசுவதா? பின்னர் அதற்காக கோவித்துக்கொள்ளாதே கணேசா, இதோ நான் எழுதிக்கொடுக்கிறேன் என்று அரை மணி நேரத்திலே ஒரு வசனத்தை எழுதிக்கொடுத்தீர்களே அதைப்பற்றி பேசுவதா? அதைத்தானே நமது அருமைக் கண்மணி சிவக்குமார் பேசிக்காட்டினார்.

‘‘காவிரி தந்த தமிழகத்து புது மணலில் களமமைத்த சேர, சோழ, பாண்டிய மன்னர், கோபுரத்து கலசத்தில் யார் கொடி பறப்பதென்று போர் தொடுத்து கொண்டிருந்த காலமது’’ என்று எழுதினீர்களே...

அப்போது உங்களுக்கும், எனக்கும் இடையே ஒரு போட்டி. உங்களது எழுத்து சிறப்பாக இருந்ததா? அல்லது நான் சிறப்பாக பேசினேனா என்று. ஆனால் மக்கள் சொன்னார்கள் இரண்டுமே நன்றாகத்தான் இருந்தது என்று. அதைப்பற்றி பேசுவதா? எதைப்பற்றி பேசுவது?

**நடிகர் திலகம் சிவாஜி**

நான் எதைப்பற்றி பேசினாலும் நான் உங்கள் கூட வந்துக்கொண்டிருப்பேனே...

என் அருமை கண்மணி பாரதிராஜா சொன்னாரே, எங்கள் வயதை உங்களுக்கு கொடுக்கிறோம் என்று. அதைப்போல் நான் சொல்கிறேன். அவர் இளைஞன் எத்தனை வயதை வேண்டுமானாலும் கொடுக்கலாம். நான் வயதானவன் நான் சொல்கிறேன். என்னுடைய வயதிலே இரண்டை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். இரண்டு மட்டும்தான். அவ்வளவு நாள் இருக்கிறேனோ, இல்லையோ தெரியாது. எனக்காக யாரும் கவலைப்படப்போவதில்லை. என் மனைவி மட்டும்தான் கவலைப்படுவாள். ஆனால் அவளுடைய சகோதரனுக்கு இரண்டு வயதை நான் கொடுக்கிறேன் என்று தெரிந்தவுடன் மிகவும் ஆனந்தப்படுபவளும் அவள்தான்.

நீங்கள் நீண்டு வாழ வேண்டும். தமிழகத்திலே பல்லாண்டு இருக்க வேண்டும். உங்களால் தமிழ் வளர வேண்டும். இன்னும் வளர வேண்டும். நீங்கள் இன்னும் எழுத வேண்டும். வயதானாலும் அதனை பேசி நானும் நடிக்க வேண்டும். இந்த வயதான காலத்திலும்கூட எவ்வளவு சுயநலமப்பா... எதற்கப்பா... எதற்காக நான் நடிக்க வேண்டும். உன் வசனத்தை நான் பேச வேண்டும், அதற்காக நான் நடிக்க வேண்டும்.

கலைஞரே, என் உயிரே, என் அருமை நண்பா, பல்லாயிரமாண்டு வாழவேண்டும். உன்னுடைய தமிழ், உன்னுடைய அரசியல், உன்னுடைய குடும்பம் ஆல் போல் தழைக்க வேண்டும். அருகு போல் வேரூன்ற வேண்டும்.

**(1998ஆம் ஆண்டு திரையுலக பாராட்டு விழா!)**

# முத்தத்தை கலைஞருக்குத்தான் கொடுக்க வேண்டும்!

‘எங்கள் தங்கம்’ படம், நான், மாறன் எல்லாம் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். கிருஷ்ணன் பஞ்சு டைரக்சன், நான் பாட்டு எழுதிக் கொண்டு இருக்கிறேன். எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவைப் பார்த்து ஒரு காதல் பாட்டு,

‘‘நான் அளவோடு ரசிப்பவன்’’ என்று விஸ்வநாதன் ஒரு அளவு கொடுத்தார். அதற்கு அடுத்த வரி போட வேண்டும் என்றார்.

நான் அடுத்த வரி போடாமல், வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டிருந்தேன். கிருஷ்ணன் பஞ்சு கேட்டார், என்னய்யா, “அடுத்த வரி போடாமல் புகையிலையைப் போட்டுக் கொண்டு இருக்கிறாய்” என்று சொன்னார்.

“நான் அளவோடு ரசிப்பவன்...” “நான் அளவோடு ரசிப்பவன்...” என்று சொல்லிக் கொண்டே இருக்கிறேன்.

கலைஞர் அப்போது தான் வந்தார். மாறன், ‘மாமா வருகிறார்’ என்று கூறினார்.

கலைஞர் வந்தார், ‘என்னய்யா வாலி பாட்டை எழுதிட்டீரா?’, என்று கேட்டார்.

இல்லே, “நான் அளவோடு ரசிப்பவன்...” அதற்கு அடுத்த வரி புரியலைன்னு சொன்னேன். விசுட்டியூனை வாசி என்றார். அவர், “நான் அளவோடு ரசிப்பவன்...” என்று ட்டியூனை வாசித்தார்.



“எதையும் அளவின்றி கொடுப்பவன்” என்றார் கலைஞர். இது எம்.ஜி.ஆர்.க்கு கலைஞர் எழுதிய பாட்டு.

நான் அசந்து போய்ட்டேன். நான் ஒரு மணி நேரமாக வெற்றிலை பாக்கு போட்டு கன்னமெல்லாம் வீங்கி போய்விட்டது, இவர் எழுதிவிட்டாரே என்று. பத்து நாட்கள் கழித்து எம்.ஜி.ஆரை, வாகினி ஸ்டுடியோவில் பார்த்தேன், எம்.ஜி.ஆர். என்னை கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தார்.

என்னெண்ணா விசேஷம் என்றேன்.

“எதையும் அளவின்றி கொடுப்பவன்...” என்று என்னைப் பற்றி எழுதி விட்டீரே?” என்றார். ‘நீங்கள் முத்தத்தை கலைஞருக்கு கொடுங்கள், இது அவர் எழுதியது, நான் எழுதியது இல்லை’ என்று கூறினேன்!

கலைஞர் தொட்டால் தகரமும் தங்கமாகும், தவளையும் சிங்கமாகும்.


**காவியக் கவிஞர் வாலி**

சத்தியமாக உள்ளத்தில் இருந்து சொல்கிறேன். என்னை வளர்த்து விட்டது திராவிட மண். இன்னமும் நான் கலைஞர் ஏற்றி வைத்த விளக்காகத்தான் எரிந்து கொண்டிருக்கிறேன்.

இவ்வளவு அறிவார்ந்த கலைஞர் என்பதால் தான், அவரை நான் புதுக்கவிதையாகச் சொன்னேன்.

**“நீ தடி இல்லாத பெரியார்,**
**பொடி இல்லாத அண்ணா,**
**இருவரும் உன்னுடனே**
**இருக்கின்றார்கள் ஒண்ணா!**
- இதுதான் புதுக்கவிதை.

# ஈழத் தமிழர்களுக்கு கலைஞர் கொடுத்த ஊக்கம்!



இலங்கையிலிருந்து அகதிகளாக வந்தபோது எமது மக்களை அரவணைத்து, மறுவாழ்விப்புப் பணிகளை உலகத்தில் வேறு எங்குமில்லாத அளவில் தமிழகத்தில் செய்து கொடுத்ததை எம்மால் என்றும் மறக்க முடியாது ஆம்; ஊரைப் பிரிந்து, உறவைப் பிரிந்து, எதிர்காலம் கேள்விக்குறியான நிலையிலும் அகதி மக்களிடமிருந்து 2500க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் உருவாக முடிந்ததென்றால் அதற்கு கலைஞர் கொடுத்த ஊக்கமும் உதவியும்தான் காரணம் என்றால் மிகையாகாது. அதிலும், இலங்கையில் நாடற்றவர்களாக இருந்த நிலையில், பள்ளிப் படிப்புக் கூட பெரும்பாலானவர்களுக்குக் குதிரைக் கொம்புதான் என்றிருந்த அவலநிலையில், இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்களுக்கிடையிலும், அவர்கள் இங்கு அகதிகளாக வந்ததால் 1000க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் உருவாக முடிந்ததென்றால். அது கலைஞரின் தொலை நோக்கால் கிடைத்த பயனே ஆகும்.

அகதிகளாகத் தமிழ் நாட்டுக்கு வந்த ஈழத் தமிழ் மக்கள் என்றல்ல, அங்கேயே உள்நாட்டுப் போர் காரணமாக உள்ளூரிலேயே இடம்பெயர்ந்து, முள்வேலிக்குள் அகதிகளாக முடக்கப்பட்டுக்கிடந்த 3 இலட்சம் தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்கள், தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி. சுய வாழ்வைத் தொடங்கவும் கலைஞரின் இராச தந்திர நடவடிக்கைகளே உதவின. இப்படிக் கனவிலும் நனவிலும் உலகத் தமிழ் மக்களின் ஒளி மயமான எதிர்காலத்தை எண்ணியே வாழ்ந்த அந்த எதையும் தாங்கும் இதயம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதயம் கலைஞர் அவர்கள்.



**சா.செ.சந்திரகாசன்**

# பிரச்சினையை நிதானமாக கையாண்டவர் கலைஞர்!



வீரப்பன் விவகாரத்தில் கலைஞர் கொண்டிருந்த அக்கறை,ஜெயலலிதா கொண்டிருந்த வன்மம் ஆகியவற்றைக் கண்டவன் நான். கலைஞர் ஆட்சியின் போது வீரப்பன் சரணடையத் தயாரான நேரத்தில், அந்தச் சூழலைக் கெடுத்தவர் ஜெயலலிதா.

வீரப்பனால் 9 வனத்துறையினர் கடத்தப்பட்டபோது முதலமைச்சராக இருந்த கலைஞர், அவர்களை மீட்க எனது தலைமையிலான குழு செல்லும் என அறிவித்து விட்டார். ஆனால்,எனது பாதுகாப்பு, இரண்டு மாநில சட்டச் சிக்கல்கள் ஆகியவற்றில் பல குழப்பங்கள், அதிகாரிகள் மட்டத்திலிருந்தன. அவற்றை கலைஞரின் கவனத்துக்குக் கொண்டு சென்றதும், அந்த நொடியிலேயே காவல் துறை உயர் அதிகாரிகளிடம் 'கோபால் சொல்வது படி செய்யவும்' எனக் கேட்டுக்கொண்டார். வீரப்பனிடமிருந்து முதலில் ஒருவரைப் பாதுகாப்பாக மீட்டு வந்த பின்னர், மீதம் எட்டு பேருடன் வீரப்பனும் சரணடையும் நிலையில்தான் ஜெயலலிதா அந்தச் சூழலை மாற்றினார்.



**நக்கீரன் கோபால்**

கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தலின் போதும் கலைஞருக்கு மிகப் பெரிய நெருக்கடி உருவானது. அந்தச் சூழலையும் நிதானமாகக் கையாண்டவர் கலைஞர்.